J2

059008 21/12/20

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி. இரா. பஞ்சவர்ணம் (க/பெ. (மறைந்த) திரு. P.S.M. சூர்யபிரகாஷ்) என்பவருக்கு 07.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி(தொ.க.1(2))த் துறை</u>

அரசாணை (1டி) எண்.179

நாள் 09.11.2020.
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம், ஐப்பசி 24

18 DEC 2020

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை நாள் 01.08.2018.
2. அரசு கடித (நிலை) எண்.213/க்பு1/2019, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 09.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்பு1) துறை, நாள் 23.01.2020.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.11735/ஜே2/2020, நாள் 04.08.2020.

******

<u>ஆணை:–</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திருமதி. இரா. பஞ்சவர்ணம் என்பவர் மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 07.06.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் கணவர் திரு. P.S.M. சூர்யபிரகாஷ் என்பார் மதுரை மாவட்டம், S.வெள்ளாங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணிகாலத்தில் 25.03.2011 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி. இரா. பஞ்சவர்ணம் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 20.02.2014 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 20.07.1972 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

(து.பி.பா.)

Scanned by TapScanner

3. இந்நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. மதுரை மாவட்டம், S.வெள்ளாங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணியிடைக் காலமான திரு. P.S.M. சூர்யபிரகாஷ் என்பவரின் வாரிசான அவரது மனைவி திருமதி. இரா. பஞ்சவர்ணம் என்பவர் பார்வை 3–ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 07.06.2017 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை வரன்முறைப்படுத்திட அவர் அப்பதவிக்குண்டான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியர் பணியில் இணைந்த நாளான 07.06.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா. எண்.15523/ட்டி1/2020, நாள் 17.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா. எண்.26800/ஜி1/2020–1, நாள் 23.10.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
திருமதி. இரா. பஞ்சவர்ணம்,
உதவி தொடக்கக் கல்வி அலுவலகம்,
கொட்டாம்பட்டி,
மதுரை மாவட்டம். (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>:–
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை,சென்னை–9.
தொழிலாளர் (ம)வேலை வாய்ப்புத்துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by TapScanner